0006

5272T/21

பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.ப.ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,

ந.க.எண்.3948/2015/பஅ2

நாள்: 08.02.2022

ஊராட்சி ஒன்றியம் 25 FEB 2022 அ1 வேப்பூர் கட்டளை

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் - 22.12.2010 அன்று பணியிடையே காலமான சாலை ஆய்வாளர்(நிலை-II), து.ராஜாங்கம் என்பவரின் வாரிசுதாரரும், மகனுமான பாலாஜி (திரு). ரா. - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை:
1) திரு.ரா.பாலாஜி, த/பெ.து.ராஜாங்கம்(லேட்), முருக்கன்குடி, குன்னம் என்பவரின் விண்ணப்பம் நாள்: 01.03.2011.
2) குன்னம் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்றிதழ் மூ.மு.எண். ஆ3/3623/2011, நாள்.09.09.2011.
3) இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை கடித எண்265149/2018/வி3, நாள்: 30.08.2018.
4) அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 23.01.2020.
5) அரசாணை (4ப) எண். 53, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை, நாள் 16.07.2018.
6) பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் நக.எண். 3948/2015/பஅ2, நாள். 18.08.2018.
7) பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் நக.எண். 3948/2015/பஅ2, நாள். 24.02.2020.
8) அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 26.02.2020.
9) அரசுக் கடிதம் எண்.6895/2021-5/இ3, நாள்: 14.12.2021.
10) இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை கடிதம் ந.க.எண்.18355/2021/டி2, நாள்: 18.12.2021.

******

உத்தரவு:

பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் சாலை ஆய்வாளராகப் பணிபுரிந்து 22.12.2010 அன்று பணியிடையே காலமான து.ராஜாங்கம் என்பவரின் வாரிசுதாரர்களுள் ஒருவரும், மகனுமான திரு.ரா.பாலாஜி என்பவருக்கு பார்வை 5-இல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளின் அடிப்படையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்-ஆக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்டு 20.08.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் நேர்வினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று, முறையாக பணியமர்த்தி அரசால் பணிவரன்முறை செய்யும் பொருட்டு பார்வை 7-இல் காண்டுள்ளவாறு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பார்வை 8-இல் காணும் அரசாணை பத்தி எண்.5.1-இல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு நியமன அலுவலரின் ஒருநிலை கூடுதல் அதிகாதரம் பெற்ற அலுவலரால் பணிவரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனியரால் சமர்ப்பிக்கப்பட்ட அசல் ஆவணங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டதில், திரு.ரா.பாலாஜி என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால் பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் 20.08.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

மேற்படி, பணிவரன்முறை செய்யபடுவதை தொடர்ந்து தனியரின் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

மாவட்ட ஆட்சியருக்காக,
பெரம்பலூர்.

பெறுநர்

திரு.ரா.பாலாஜி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
வேப்பந்தட்டை- உரியவழியாக

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை - 600 015
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ /கி.ஊ), வேப்பந்தட்டை.
நகல்: பஅ2-இருப்புக் கோப்புக்கு.

ந.க.எண்: 2727/2021/அ1 ஊராட்சி ஒன்றியம்
நாள்: 02/03/2022 வேப்பந்தட்டை

நகல் சார்வு செய்யப்படுகிறது.

Block Development Officer (VP),
Veppanthattai

பெறுநர்

திரு. ரா. பாலாஜி
இளநிலை உதவியாளர் - II
ஊராட்சி ஒன்றியம்
வேப்பந்தட்டை.